**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 27/2023** **Date:03.02.2026.**

**(PW1)- ஜெயசேகர்**

<u>**2** முதல் **5** மற்றும் **8** ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்த நபர் யார் என்றால் ரீத்தாப்புரம், புனித ரீத்தம்மாள் ஆலய பங்கு தந்தையும் செயலாளரும் தாக்கல் செய்துள்ளர். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு மேற்படி நபர்களுக்கு எந்த அதிகாரமும் மறைமவாட்ட ஆயராலோ பங்கு பேரவை உறுப்பினராலோ வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு அதிகாரம் அளித்ததை காட்டக் கூடிய எந்த ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் எனது வழக்கில் அதை பொறுத்து நான் கட்சி செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

2. எங்களது பங்கு தந்தை நல்ல உடல் நலத்துடன் தான் இருக்கிறார் என்றால் சரிதான். அவர் இன்று நீதிமன்றம் வந்துள்ளாரா என்றால் வரவில்லை அவருக்காக துனை தலைவர் என்ற முறையில் நான் ஆஜராகியுள்ளேன். எங்களது பங்கு செயலாலரும் நல்ல உடல் நிலையில் தான் உள்ளார் என்றால் சரிதான், அவருக்காகவும் தான் ஆஜராகியுள்ளேன். இந்த வழக்கின் பிரதிவாதிகள் எனது பங்கை சார்ந்த கிறிஸ்தவ நபர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு விபரங்கள் அனைத்தும் எனக்கும் தெரியும் என்றால் எனக்கு தெரியும். இந்த வழக்கு எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் 2023 வருடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்யும் சமயம் நான் நிர்வாகியாக இல்லை என்றால் சரிதான்.

3. இந்த வழக்கு 2023 ல் தாக்கல் செய்யவில்லை என்றாலும் 23.07.2021 ல் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் தற்போது தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணம் நான் எனது வழக்குடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பற்றி எந்த விபரமும் வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பிராதில் எந்த பத்தியில் மேற்டி ஆவணம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து வழக்கு மூலம் கொடுத்திருப்பதாக தெரிவித்திருக்கிறார். வா.சா.ஆ.2 ஆவணம் யாரால் யாருக்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனது வழக்கறிஞரால் எனக்கு எழுதி கொடுக்கப்பட்டது. எந்த ஆண்டு ஆவணம் எழுதப்பட்டது என்றால் நினைவில்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் என்ன என்றால் 226/13 ஆகும். நான் குறிப்பிடும் மேற்படி சர்வே எண் வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சாட்சி அமைதியாக உள்ளார்.

4. வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் நான்கு பக்க எல்கைகள் என்ன என்றால் கிழக்குகே கருங்கல் - குளச்சல் பிராதான சாலை, வடக்கே அமிர்தம், லாசர் சொத்தாகும், மேற்கு, தார் ரோடு, அமிர்தம் அவர்கள் சொத்து, ஆலய சொத்தும் உள்ளது, தெற்கே பிரதிவாதியின் சொத்தும் அவரது சகோதரர் சொத்தும் மற்ற பிரதிவாதிகள் சொத்தும் உள்ளது. நான் குறிப்பிட்டுள்ள எல்கை வா.சா.ஆ.2 ஆவணத்தில் துலங்காது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் பற்றி எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றாலும் சரியல்ல.

( குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக 09.02.2026 தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)